|| ஸ்ரீ: || ।

# உன்னையன்றிவேறு.

---



உன்னையன்றிவேறு ஒருவரையும்,
என்மனம் நினையாது இருக்கின்றதே ;
உன்மனம் என்னவென்று அறியாது,
என்னை உன்னிடம் தந்தேன் கண்ணா !

உன்னையன்றி.......

புன்னை மரத்தடியில் உன்னைக்கண்டு,
என்னை நான் இழந்தேன் உன்னழகில் ;
கண்ணை விட்டு மறைந்தவனே என்மனப்,
புண்ணை ஆற்றிட நீயும் வருவாய் கண்ணா !

உன்னையன்றி.........

நல்லவன் போல்நீ நடித்து செய்தவற்றை,
சொல்லவும் என்மனமின்று கூசுகின்றதே ;
மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது,
அல்லலுறும் என்மானம் காத்திட வா கண்ணா !

உன்னையன்றி...........

( பொய்கையடியான் )